# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **திருக்குறள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# திருக்குறள்

| | | |
|---|---|---|
| திரு + குறள் | - | திருக்குறள் (திரு- செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத் தன்மை) |
| ஆசிரியர் | - | திருவள்ளுவர் |
| பெற்றோர் | - | ஆதி, பகவான் |
| மனைவி | - | வாசுகி |
| காலம் | - | கி.மு. 31 (அ) கி.பி. 2 ஆம் நூற்றாண்டு |
| ஊர் | - | திருமயிலாப்பூர் |
| இயற்றிய நூல் | - | திருக்குறள் (பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்று (அற நூல்) |
| சிறப்பு பெயர்கள் | - | நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பொய்யில் புலவர், பெருநாவலர். |
| திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் | - | பொதுமறை, தமிழ்மறை, உலகப்பொதுமறை, முப்பால் நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, திருவள்ளுவப்பயன், அறவிலக்கியம், பொருளுரை, திருவள்ளுவம், முதுமொழி, தமிழர்திருமறை. |

- திருக்குறள் - 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்களைக் கொண்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்துப்பால் (38) | பாயிரவியல் (4) | இல்லறவியல் (20) | துறவியல் (13) | ஊழியல் (1) |
| பொருட்பால் (70) | அரசியல் (25) | அங்கவியல் (32) | ஓழியியல் (13) | - |
| இன்பத்துப்பால் (25) | களவியல் (7) | கற்பியல் (18) | - | - |

- 107 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என பொது நெறி வகுத்துக் காட்டிய புலவர்- திருவள்ளுவர்
- திருக்குறள் - அடையடுத்த கருவியாகு பெயர்
- திருக்குறள் 9 இயல்களை கொண்டுள்ளது.
- **அறத்துப்பால் -** பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற 4 இயல்களைக் கொண்டது
- **பொருட்பால்** - அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்ற 3 இயல்களை கொண்டது
- **காமத்துபால்** - களவியல், கற்பியல் என்ற 2 இயல்களை கொண்டது

**திருக்குறள், திருவள்ளுவர் பற்றிய புகழுரைகள்:**

- ❖ ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழியால் குறிக்கப்படும் நூல்கள் - நாலடியார், திருக்குறள்
- ❖ பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் - நால் - நாலடியார், இரண்டு - திருக்குறள்
- ❖ தமிழ்மாதின் இனிய உயிர்நிலை என்று போற்றப்படும் நூல் திருக்குறள்
- ❖ "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாரதியார் கூறியுள்ளார்
- ❖ "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் பாடியுள்ளார்
- ❖ "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்றவர் பாரதிதாசன்.
- ❖ "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" என்று புகழ்ந்தவர் பாரதிதாசன்.
- ❖ "தெள்ளுதமிழ்நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள்"
  "அள்ளு தொறுஞ்சுவை உள்ளுந்தொறும் உணர்வாகும்" -பாரதிதாசன்
- ❖ "வெல்லாததில்லை திருவள்ளுவன்வாய் விளைத்தவற்றுள்" – பாரதிதாசன்
- ❖ "வள்ளுவர்செய் திருக்குறளை, மறவறநன் குணர்ந்தோர்கள்" – மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை
- ❖ ஒளியைக் கோட்டமடையச்செய்து தொலைவில் உள்ள பொருளை அருகில் தோன்றுமாறு செய்யலாம் என்றவர் - கலிலியோ கலிலி
- ❖ "அணுவை துளைத்து ஏழ் கடலை புகட்டி குறுகத்தறித்த குறள்" என்று திருக்குறளின் திட்பமும், நுட்பமும் கருதி ஔவையார் புகழ்ந்துள்ளார்.
- ❖ தமிழரின் வாழ்வியல் இலக்கணம் என போற்றப்படும் நூல் திருக்குறள்.
- ❖ "திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால், தமிழன் என்ற ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது - கி.ஆ.பெ. விஸ்வநாதம்.
- ❖ திருக்குறள் என்ற நூல் தோன்றியிருக்காவிட்டால் தமிழ்மொழி என்ற ஒரு மொழி இருப்பதாக உலகத்தாருக்கு தெரிந்திருக்காது" - கி.ஆ.பெ.விஸ்வநாதம்
- ❖ சொல்லழகும் பொருளழகும் ஒருங்கே ஒளிரும் திருக்குறளை வாழ்க்கைக்கு விளக்கமாகக் கொள்வதே சாலப் பொருத்தம் - சீத்தலைச் சாத்தனார் (திருவள்ளுவ மாலை)
- ❖ திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் நூல் திருவள்ளுவமாலை (53 புலவர்கள் பாடிய 55 பாடல்கள் உள்ளன)
- ❖ வாழ்வியல் நெறிகளை மனித நாகரீகம் பிறநாடுகளில் தோன்றும் முன்னரே வகுத்துக்காட்டிய நூல் திருக்குறள்
- ❖ இறைக்கோட்பாட்டின் பொது நெறியை கூறும் நூல் திருக்குறள், நீதி நூல்களில் காலத்தால் முற்பட்டதும் பொருட் சிறப்பால் உயர்ந்ததுமாக திகழ்வது திருக்குறளே.
- ❖ சங்க காலத்து ஒழுக்க முறைகள் சிலவற்றைக் கடிந்து நன்னெறிகளைப் போதிக்கும் தன்மை திருக்குறளில் காணப்படுகிறது. கள்ளுண்பதை, புலால் உண்பதை தடுக்கிறது.
- ❖ உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் திருக்குறள் வைக்கப்பட்டுள்ளது

- ❖ இங்கிலாந்து நாட்டு காட்சி சாலையில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது
- ❖ "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
  தீதின்றி வந்த பொருள்" - அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம்பெறும் குறள்

- ❖ திருக்குறளில் 10 அதிகாரங்கள் உடைமை என்ற சொல்லில் அமைந்துள்ளன

| | | |
|---|---|---|
| 1. அன்புடைமை | 2. அடக்கமுடைமை | 3. ஒழுக்கமுடைமை |
| 4. பொறையுடைமை | 5. அருளுடைமை | 6. அறிவுடைமை |
| 7. ஊக்கமுடைமை | 8. ஆள்வினையுடைமை | 9. பண்புடைமை |
| 10. நாணுடைமை | | |

- ❖ திருக்குறளில் ஏழு என்ற எண்ணுப் பெயர் எட்டு குறள்களில் காணப்படுகிறது
- ❖ திருக்குறளில் கோடி என்ற சொல் 7 இடங்களில் காணப்படுகிறது.
- ❖ திருக்குறளில் 70 கோடி என்ற சொல் 1 முறை காணப்படுகிறது.
- ❖ திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் 9
- ❖ திருக்குறளில் இடம்பெற்ற இரு மலர்கள் அனிச்சம், குவளை.
- ❖ திருக்குறளில் இடம்பெற்ற ஒரே பழம் நெருஞ்சி
- ❖ திருக்குறளில் இடம்பெற்றுள்ள மரங்கள் பனை, மூங்கில்
- ❖ திருக்குறளில் இடம்பெற்றுள்ள விதை குன்றி மணி.
- ❖ திருக்குறளில் இடம்பெறாத ஒரே உயிரெழுத்து -ஔ
- ❖ திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்
- ❖ தை 2 ஆம் நாளை தமிழக அரசு திருவள்ளுவர் நாளாக அறிவித்துள்ளது.
- ❖ கி.மு. 31ஐ அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- ❖ தற்பொழுது திருவள்ளுவர் ஆண்டு கி.மு. 31 + 2018 = 2049.

**திருக்குறளின் உரையும், பதிப்பும்:**

- ❖ திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் பதின்மர் எனப்படுவர் - தருமர், தாமத்தர், பரிதி, திருமலையர், பரிபெருமாள், மணக்குடவர், நச்சர், பரிமேலழகர், மல்லர், காளிங்கர்.
- ❖ பதின்மர் எழுதிய உரையில் சிறந்த உரை - பரிமேலழகர்
- ❖ திருக்குறளுக்கு முதன் முதலில் உரை கண்டவர்- மணக்குடவர்
- ❖ தருமர் காலத்தால் முற்பட்டவர், பரிமேலழகர் காலத்தால் பிற்பட்டவர்.
- ❖ மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812ல் முதன் முதலில் திருக்குறளை பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டார்
- ❖ பரிமேலழகர் உரையுடன் முதல் முதலாகத் திருக்குறளை பதிப்பித்தவர் இராமனுஜ கவிராயர் - 1840
- ❖ திருக்குறள் பதினெண்கீழ்கணக்கு நூல்களில் அதிக பாடல்களையும் அடிகளையும் கொண்டது

- ❖ பதினெண்கீழ்கணக்கு நூல்களில் பாவகையால் (குறள் வெண்பா) பெயர் பெற்ற ஒரே நூல் திருக்குறள்

**திருக்குறளின் மொழிப் பெயர்ப்புகள்:**

| | | |
|---|---|---|
| ❖ வீரமாமுனிவர் | - | அறத்துப்பால், பொருட்பால் - இலத்தீன் |
| ❖ ஜி.யு.போப் | - | ஆங்கிலம் |
| ❖ எல்லீஸ்துரை | - | ஆங்கிலம் |
| ❖ கிண்டர்ஸ்லே, வா.வே.சு.ஐயர் | - | ஆங்கிலம் |
| ❖ பூர்ணலிங்கம, இராஜாஜி | - | ஆங்கிலம் |
| ❖ டாக்டர். கிரௌல் | - | ஜெர்மன் |
| ❖ ஏரியல் | - | பிரெஞ்சு |
| ❖ தால்சுதாய் | - | உருசியம் |
| ❖ பி.டி.ஜெயின் | - | இந்தி |
| ❖ வைத்தியநாத தேசிகர் | - | தெலுங்கு |

**திருக்குறள் "அ" கரத்தில் தொடங்கி "ன" கரத்தில் முடியும்**

❖ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு **- குறள் 1**

❖ ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் **- குறள் 1330**

- ❖ சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, குமரேச வெண்பா போன்றவையும் குறளின் சிறப்பையே கூறுகின்றன.
- ❖ திருக்குறளை முதல் முதலாகப் பதிப்பித்தவர் அம்பலவாணத் தம்பிரான் - 1812
- ❖ பரிமேலழகர் உரையுடன் முதல் முதலாகத் திருக்குறளை பதிப்பித்தவர் இராமனுஜ கவிராயர் - 1840
- ❖ தமிழுக்கு கதியெனப் போற்றப்படும் நூல்கள் - கம்பராமயணமும், திருக்குறளும்
- ❖ உலகளாவிய இலக்கியம் என அழைக்கப்படுவது திருக்குறள்
- ❖ உடம்பை வளர்த்தேன் உபாயம் அறிந்தே - திருவள்ளுவர்
- ❖ அறிவு அற்றம் காக்கும் கருவி - திருவள்ளுவர்
- ❖ தமிழரின் வாழ்வியல் இலக்கணம் - திருக்குறள்

**மேற்கோள்:**

- "தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட
  பனையளவு காட்டும் படித்தால்" **- கபிலர் (திருவள்ளுவமாலை)**
- "வள்ளுவரும் தம் குறள் பாவடியால்
  வையத்தார் உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து" **- பரணர்**

- "உள்ளுதோறும் உள்ளுதோறும்
  உள்ளம் உருக்குமே
  வள்ளுவர் வாய்மொழி மாண்பு" **- மாங்குடி மருதனார்**

- "பொய்ப்பால பொய்யேயாப்ப
  போயினபொய் யல்லாத
  மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே முப்பாலின்
  தெய்வத் திருவள் ளுவர்செய் திருக்குறளால்
  வையத்து வாழ்வார் மனத்து" **- தேனிக்குடி கீரனார்**

❖ கடுகைத் துளைத்து
ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள். **- இடைக்காடர்**

❖ அணுவைத் துளைத்து
ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள். **- ஔவையார்**

❖ "ஒன்றே பொருளெனின் வேறென்பர்; வேறெனின்
அன்றென்பர் ஆறு சமயத்தார்- நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி" **- கல்லாடர்**

❖ என்றும் புலரா தியாணர்நாட் செல்லகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நிர்மையதாய்க-குன்றாத **- இறையனார்**
**(திருவள்ளுவமாலை)**

❖ "புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம்கலங்கித் திகைப்பதேன்"- வித்தகன்
"தெய்வப் புலவர் திருவள்ளுவர்சொன்ன
பொய்யில் மொழி இருக்கும் போது
செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை
நெஞ்சமே சிந்தனை செய்வாய் தினம்
நீதித்திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
ஓதித்தொழுது எழுக ஓர்ந்து" **- கவிமணி**

## அன்புடைமை

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

3. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

4. அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

5. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.

10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

# பண்புடைமை

1. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
   பண்புடைமை என்னும்வழக்கு.

2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
   பண்புடைமை என்னும் வழக்கு.

3. உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
   பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
   பண்பு பாராட்டும் உலகு.

5. நகையுள்ளும் இன்னா இகழ்ச்சி பகையுள்ளும்
   பண்புள பாடறிவார் மாட்டு.

6. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
   மண்புக்கு மாய்வது மன்.

7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
   மக்கட்பண்பு இல்லா தவர்.

8. நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
   பண்பாற்றார் ஆதல் கடை.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
   பகலும்பாற் பட்டன்று இருள்.

10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
    கலந்தீமை யால்திரிந் தற்று.

# கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
   கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
   புண்ணுடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
   அனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
   கடையரே கல்லா தவர்.

6. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
   சாந்துணையுங் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து

9. தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
   காமுறுவர் கற்றறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
    மாடல்ல மற்றை யவை.

## கேள்வி

1. செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம் அச்செல்வம்
   செல்வத்துள் எல்லாந் தலை.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
   வயிற்றுக்கும் ஈயப் படும்.

3. செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
   ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

4. கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு
   ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அன்றே
   ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
   ஆன்ற பெருமை தரும்.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்க்
   குழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

8. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
   தோட்கப் படாத செவி.

9. நுணங்கி கேள்விய ரல்லார் வணங்கிய
   வாயின ராதல் அரிது.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
    அவியினும் வாழினும் என்.

## அறிவுடைமை

1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
   உள்ளழிக்க லாகா அரண்.

2. சென்ற இடத்தால் செலவிட தீதொரீஇ
   நன்றின்பால் உய்ப்ப தறிவு.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்ப தறிவு.

4. எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
   நுண்பொருள் காண்ப தறிவு.

5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
   கூம்பலும் இல்ல தறிவு.

6. எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
   அவ்வ துறைவ தறிவு.

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
   அஃதறி கல்லா தவர்.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
   அஞ்சல் அறிவார் தொழில்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
   அதிர வருவதோர் நோய்.

10. அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
    என்னுடைய ரேனும் இலர்.

## அடக்கமுடைமை

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
   ஆரிருள் உய்த்து விடும்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
   அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

3. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
   ஆற்றின் அடங்கப் பெறின்.

4. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
   மலையினும் மாணப் பெரிது.

5. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
   செல்வர்க்கே செல்வம் தகைத்து.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
   எழுமையும் ஏமாப்பு புடைத்து.

7. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
   சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

8. ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
   நன்றாகா தாகி விடும்.

9. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினாற் சுட்ட வடு.

10. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
    அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

## ஒழுக்கமுடைமை

1. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

2. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

5. அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

9. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

## பொறையுடைமை

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
   மறத்தல் அதனினும் நன்று.

3. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
   வன்மை மடவார்ப் பொறை.

4. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
   போற்றி யொழுகப் படும்.

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
   பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
   பொன்றுந் துணையும் புகழ்.

7. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
   அறனல்ல செய்யாமை நன்று.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
   தகுதியான் வென்று விடல்.

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
   இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

10. உண்ணாது நோற்பார் பெரியார் பிறர்சொல்லும்
    இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

## நட்பு

1. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
   வினைக்கரிய யாவுள காப்பு.

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
   பின்னீர  பேதையார் நட்பு.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
   பண்புடை யாளர் தொடர்பு.

4. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான்
   நட்பாங் கிழமை தரும்.

5. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக நட்பது நட்பு.

6. அழிவி னவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
   அல்லல் உழப்பதாம் நட்பு.

7. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
   இடுக்கண் களைவதாம் நட்பு.

8. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
   ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

9. இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
   புனையினும் புல்லென்னும் நட்பு.

10. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
    மேற்சென்று இடித்தற் பொருட்டு.

## வாய்மை

1. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.

2. பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
   நன்மை பயக்கும் எனின்.

3. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
   தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

4. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
   உள்ளத்து ளெல்லாம் உளன்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
   தானஞ்செய் வாரின் தலை.

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
   எல்லா அறமுந் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
   செய்யாமை செய்யாமை நன்று.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
   வாய்மையால் காணப் படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
   பொய்யா விளக்கே விளக்கு.

10. யாமெய்யாக்கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
    வாய்மையின் நல்ல பிற.

## காலம்அறிதல்

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
   வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
   தீராமை ஆர்க்குங் கயிறு.

3. அருவினை யென்ப உளவோ கருவியான்
   காலம் அறிந்து செயின்.

4. ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம்
   கருதி இடத்தாற் செயின்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
   ஞாலம் கருது பவர்.

6. ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
   தாக்கற்குப் பேருந் தகைத்து.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
   உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
   காணின் கிழக்காம் தலை.

9. எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
   செய்தற் கரிய செயல்.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
    குத்தொக்க சீர்த்த இடத்து.

## வலி

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2. ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

5. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

6. ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

7. ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

8. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

9. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

10. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

## ஒப்புரவறிதல்

1. மைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
   என்ஆற்றுங் கொல்லோ உலகு.

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
   வேளாண்மை  செய்தற் பொருட்டு.

3. புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
   ஒப்புரவின் நல்ல பிற.

4. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
   செத்தாருள் வைக்கப் படும்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
   பேரறி வாளன் திரு.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
   நயனுடை யான்கண் படின்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
   பெருந்தகை யான்கண் படின்.

8. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
   கடனறி  காட்சி யவர்.

9. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
   செய்யாது அமைகலா வாறு.

10. ஒப்பருவி னால்வரும் கோடெனின் அஃதொருவன்
    விற்றுக்கொள் தக்க துடைத்து.

## செய்நன்றியறிதல்

1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்றல் அரிது

2. காலத்தி னாற் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
   நன்மை  கடலின் பெரிது.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
   கொள்வர் பயன்தெரி வார்.

5. உதவி வரைத்தன்று உதவி உதவி
   செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
   துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
   விழுமந் துடைத்தவர் நட்பு.

8. நன்றி மறப்பது நன்றன்னு நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
   ஒன்று நன்று உள்ளக் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
    செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

## சான்றாண்மை

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
   சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
   எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
   ஐந்துசால் ஊன்றிய தூண்.

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
   சொல்லா நலத்தது சால்பு.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
   மாற்றாரை மாற்றும் படை.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
   துலையல்லார் கண்ணும் கொளல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
   என்ன பயந்ததோ சால்பு.

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
   திண்மை உண்டாகப் பெறின்.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
   ஆழி எனப்படு வார்.

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்
    தாங்காது மன்னோ பொறை.

## பெரியாரைத் துணைக் கோடல்

1. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைக் சூழ்ந்து கொளல்.

6. தக்கா துணையாரை யாள்வரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

7. இடிக்குந் துணையாரை யாள்வரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

9. முதலிலார்கு ஊதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

## பொருள் செயல்வகை

1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்லது இல்லை பொருள்.

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
   எல்லாரும் செய்வர் சிறப்பு.

3. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
   எண்ணிய தேயத்துச் சென்று.

4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
   தீதின்றி வந்த பொருள்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
   புல்லார் புரள விடல்.

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
   தெறுபொருளும் வேந்தன் பொருள்.

7. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
   செல்வச் செவிலியால் உண்டு.

8. குன்றேறியானைப் போர் கண்டற்றால் தன்கைத் தொன்று
   உண்டாகச் செய்வான் வினை.

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
   எஃகதனிற் கூரிய தில்.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
    ஏனை இரண்டும் ஒருங்கு.

## வினைத்திட்பம்

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
   மற்றைய எல்லாம் பிற.

2. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
   ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

3. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
   எற்றா விழுமந் தரும்.

4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
   சொல்லிய வண்ணம் செயல்.

5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
   ஊறெய்தி உள்ளப் படும்.

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
   திண்ணியர் ஆகப் பெறின்

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
   அச்சாணி அன்னார் உடைத்து.

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
   தூக்கங் கடிந்து செயல்.

9. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
   இன்பம் பயக்கும் வினை.

10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
    வேண்டாரை வேண்டாது உலகு.

## இனியவை கூறல்

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
   செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
   இன்சொலன் ஆகப் பெறின்.

3. முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
   இன்சொ லினதே அறம்.

4. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
   இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய அறம்பெருகும்
   நல்லவை நாடி இனிய சொலின்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
   பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
   இம்மையும் இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
   வன்சொல் வழங்கு வது.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
    கனியிருப்பக் காய்கவர்ந் தற்று